**அறிவாற்றல் கருமையமொன்றின் அடித்தளமாக பாடசாலைக் கல்வி முறைமையை மாற்றியமைத்தல் செயற்திட்டம் – மத்திய மட்டம் - 2015.**

---

அறிவாற்றல் கருமையமொன்றின் அடித்தளமாக பாடசாலைக் கல்வி முறைமையை மாற்றியமைத்தல் செயற்திட்டம் – மத்திய மட்டத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கை மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2012 மே 18 ஆந் திகதிய 5037–எல்கே ஆம் இலக்க நிதியளித்தல் உடன்படிக்கையின் 2 ஆம் பட்டோலையின் 2 ஆம் பிரிவின் பீ.3 ஆம் பந்தியிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்ட நடவடிக்கைகள் தேசிய மட்டத்தில் கல்வி அமைச்சினாலும் மாகாண மட்டத்தில் மாகாண சபைகளினாலும் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. இந்த அறிக்கையானது தேசிய மட்டத்தில் கல்வி அமைச்சால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மீதான கருத்துரைகளைக் கொண்டுள்ளது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

---

செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் பிரகாரம், செயற்திட்டமானது நாட்டின் பொதுக் கல்வித்துறை முகங்கொடுக்கும் சவால்களை குறிப்பிடுகின்ற கல்வித்துறை அபிவிருத்தி கட்டமைப்பு மற்றும் நிகழ்ச்சித்திட்டம் 2012 – 2016 ஐ அமுல்படுத்துவதற்கு நிதி உதவியை வழங்குவதற்காக அமுல்படுத்தப்பட்டுள்ளது. மத்திய மட்டத்தில் கல்வி அமைச்சு செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகும். இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்ட அறிவாற்றலிற்கான ஒரு அடித்தளத்தை வழங்குவதற்கு ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைக் கல்வியின் அணுகுமுறை மற்றும் தரத்தினை உயர்த்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாக உள்ளன. நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 11,000 மில்லியனிற்கு சமமான எஸ்டிஆர் 64.1 மில்லியன் (ஐ.அ.டொலர் 100 மில்லியன்) ஆகும். அதில் 70 சதவீதம் முதல் 80 சதவீதம் வரையான நிதிகள் மாகாணக் கல்வி அதிகாரசபைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதுடன் மிகுதி கல்வி அமைச்சிற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் செயற்பாடுகள் 2012 ஒக்தோபர் 01 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2017 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

**1.3 ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கைக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்த ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையை தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கை மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கை பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப்

பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையை தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(உ) ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையானது நிதிப்பிரமாணம் 150 மற்றும் பொதுத் திறைசேரியின் 2015 திசெம்பர் 10 இன் 245/2015 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை என்பவற்றிற்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போதான வைப்புக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன பொதுத் திறைசேரியால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(எ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஏ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1. அபிப்பிராயம்**

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட 2015 ஆம் ஆண்டிற்கான கல்வி அமைச்சுடன் தொடர்புடைய 2014 இன் 41 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்திற்கான முதலாவது பட்டோலையின் 126 ஆம் இலக்க தலைப்பின் ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாய சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 150 மற்றும் பொதுத் திறைசேரியின் 2015 திசெம்பர் 10 ஆந் திகதிய 245/2015 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கை பொதுத் திறைசேரியின் கணனி அச்சீட்டுத்தாள்கள், வருடாந்த மதிப்பீடுகள் மற்றும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகள் என்பவற்றுடன் இணங்கியிருந்தது என்றும்,

(ஆ) 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போதான வைப்புக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன பொதுத் திறைசேரியால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(இ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(உ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்**

**3.1 நிதிகளின் பயன்பாடு**

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | மத்திய மட்டத்திற்காக நிதியளித்தல் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் 2015 ஆம் ஆண்டின் போது | | பயன்படுத்திய நிதிகள் 2015 திசெம்பர் 31 வரை | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஏடிபீ | 30 | 3,300 | 1,230 | 7 | 958 | 18 | 2,482 |
| | **30** | **3,300** | **1,230** | **7** | **958** | **18** | **2,482** |

வழமையாக, செயற்திட்டம் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் ஊடாக செலவிடுவதற்கு அனுமதிக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க மிகையான கட்டுநிதிகளைப் பெற்றிருந்ததன் விளைவாக மீளாய்வாண்டின் முதல் அரையாண்டின் ஒவ்வொரு மாத இறுதியிலும் வரிசை அமைச்சின் வங்கிக் கணக்குகளில் ரூபா 23 மில்லியன் தொடக்கம் ரூபா 96 மில்லியன் வரையான வீச்சில் மீதிகள் இருந்தது. மேலும், 2015 யூலை தொடக்கம் செப்தெம்பர் வரையான காலப்பகுதியின் ஒவ்வொரு மாத இறுதியிலும் வரிசை அமைச்சின் வங்கிக் கணக்குகளில் ரூபா 37 மில்லியன் தொடக்கம் ரூபா 53 மில்லியன் வரையான வீச்சில் மீதிகள் இருந்தன.

## 3.2 பௌதீக முன்னேற்றம்

கல்வி அமைச்சானது கல்வித்துறை அபிவிருத்தி கட்டமைப்பு மற்றும் நிகழ்ச்சித்திட்டம் 2012 – 2016 இன் பிரகாரம் தொழில்நுட்பவியல் ஆய்வுகூடங்களை நிர்மாணித்தல், அத்தகைய ஆய்வுகூடங்களுக்காக ஆய்வுகூட மற்றும் ஏனைய உபகரணங்களை கொள்வனவு செய்தல் மற்றும் மாணவரின் செயலாற்றலினை மேம்படுத்துவதனூடாக உயர்தர விஞ்ஞானப் பிரிவிற்கான மாணவர் பங்குபற்றுதலை அதிகரிக்கும் பொருட்டு ஆசிரியர்களுக்கான பயிற்சிகளை வழங்குதல் என்பவற்றிற்கு நடவடிக்கை எடுத்திருந்ததுடன் கடன் பெறுகைகளை அத்தகைய நோக்கங்களிற்காக பயன்படுத்தியிருந்தது. அவற்றின் மீது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சு 1005 தொழில்நுட்ப ஆய்வுகூடங்களை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்ததுடன் 2012 – 2015 காலப்பகுதிக்காக செய்யப்பட்ட ரூபா 12.58 மில்லியன் தொகையான ஒதுக்கீடுகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 12.24 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டிருந்தது. 989 ஆய்வுகூடங்களின் நிர்மாண வேலைகள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டிருந்ததுடன் அவற்றில் 823 ஆய்வுகூடங்கள் 2016 மார்ச் 31 இல் உள்ளவாறு மாணவர்களின் பாவனைக்காக திறக்கப்பட்டிருந்தது. ஆசிரியர்கள் மற்றும் ஏனைய வசதிகளின் பற்றாக்குறை காரணமாக 2016 மார்ச் 31 இல் உள்ளவாறு 166 ஆய்வுகூடங்கள் விளைவற்றிருந்ததென அவதானிக்கப்பட்டது.ஏனைய 07 ஆய்வுகூடங்களின் நிர்மாண வேலைகள் செயற்பாட்டில் இருந்ததுடன் 09 ஆய்வுகூடங்களின் நிர்மாண வேலைகள் அத் திகதியிலுள்ளவாறு ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஏனைய 55 பாடசாலை கட்டிடங்களின் வெவ்வேறு வகையான நிர்மாணத்திற்காக ரூபா 149.63 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் 2015 நவம்பர் 30 அளவில் பூர்த்தியாக்கப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்த போதிலும் உரிய கட்டிடங்களின் நிர்மாண வேலைகள் 2016 மார்ச் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. அவற்றில், செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2016 மார்ச் 31 அளவில் பூர்த்தியாக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட 15 ஆசிரியர் விடுதிகளின் நிர்மாண வேலைகள் 2016 ஏப்ரல் 30 இலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 18 தேசிய பாடசாலைகளின் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூபா 26.73 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் 2015 நவம்பர் 30 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு

எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் 2016 ஏப்ரல் 30 இலும் அத்தகைய வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) கொழும்பு மற்றும் களுத்துறை மாவட்டங்களிலுள்ள 77 ஆய்வுகூடங்களில் மஹிந்தோதய ஆய்வுகூடங்களுக்கான 06 கட்டிடங்களின் நிர்மாண வேலைகள் மீது மேற்கொள்ளப்பட்ட தெரிவுச் செவ்வையின் போது தளப்பகுதிகள் மற்றும் சுவர்களில் வெடிப்புக்கள் போன்ற பல தரக் குறைபாடுகள் வெளிப்பட்டிருந்தது. மேலும், களுத்துறையிலுள்ள வேதார மகா வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட மஹிந்தோதய ஆய்வுகூடம் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டிடத்தின் நிர்மாண வேலைகள் மற்றும் கணணிகள் உள்ளடங்கிய உபகரணங்களின் நிறுவுதல் என்பன பூர்த்திசெய்யப்பட்ட போதிலும் 2016 மார்ச் வரை மூடப்பட்டிருந்தது.

(ஈ) பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், 143 தேசிய பாடசாலைகள் உள்ளடங்கலாக 353 பாடசாலைகள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு க.பொ.த. (உயர்தரம்) இற்காக தொழில்நுட்பப் பிரிவிற்கான வகுப்புக்களை ஆரம்பித்திருந்ததுடன் 40,589 மாணவர்கள் தொழில்நுட்பப் பிரிவிலுள்ள பாடங்களை தெரிவுசெய்திருந்தனர். மேலும், ஒவ்வொரு வகையிலுமுள்ள 334 தகைமையுடைய ஆசிரியர்கள் மாத்திரமே தொழில்நுட்பப் பிரிவு வகுப்புக்களுக்காக கிடைக்கக்கூடியதாக மட்டும் இருந்தது என அவதானிக்கப்பட்டது.

(உ) பரீட்சைத் திணைக்களத்தின் செயலாற்றல் மீதான அறிக்கையின் பிரகாரம், 2015 இல் நடைபெற்ற க.பொ.த. (உயர்தர) பரீட்சைக்காக தோற்றிய 210,340 பாடசாலை பரீட்சார்த்திகளில் 8.64 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 18,183 பாடசாலை பரீட்சார்த்திகள் அனைத்துப் பிரிவிலுமுள்ள எல்லாப் பாடங்களிலும் சித்தியடைந்திருக்காததுடன் 2.83 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 5,930 பாடசாலை பரீட்சார்த்திகளால் எல்லாப் பாடங்களுக்காகவும் ‘‘ஏ’’ சித்தியினை பெற்றிருந்தனர். மேலும் வர்த்தகப் பிரிவில் கற்ற பாடசாலை பரீட்சார்த்திகளின் 70.38 சதவீதம் பல்கலைக்கழக நுழைவுக்கான தகைமையின் உயர் சதவீதத்தை பதிவு செய்திருந்ததுடன் பௌதீக விஞ்ஞானப் பிரிவில் மற்றும் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் பரீட்சார்த்திகளின் முறையே 51.65 சதவீதம் மற்றும் 48.03 சதவீதம் பல்கலைக்கழக நுழைவுக்கான தகைமையை பெற்றிருந்தனர். இலங்கையில் முதலாவது தடவை 2015 இல் நடைபெற்ற க.பொ.த (உயர்தர) பரீட்சைக்காக தோற்றிய பொறியியல் தொழிநுட்பப் பிரிவு மற்றும் விஞ்ஞான தொழிலுட்பப் பிரிவு என்பவற்றில் கற்ற பாடசாலை பரீட்சார்த்திகள் முறையே 50.09 சதவீதம் மற்றும் 60.66 சதவீத சித்தியெய்தல் வீதத்தினை பதிவு செய்திருந்ததுடன் 11 பரீட்சார்த்திகள் எல்லாப் பாடங்களிலும் ‘‘ஏ’’ சித்தியினைப் பெற்றிருந்தனர். செயற்திட்ட மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் வர்த்தக மற்றும் கலைப் பிரிவுகளை விட விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப பிரிவுகளில் க.பொ.த (உயர்தர) பரீட்சைக்காக தோற்றிய பரீட்சார்த்திகளின் பல்கலைக்கழக நுழைவு வீதம் அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

(ஊ) கடந்த 03 ஆண்டுகளின் போது தரம் 5 புலமைப்பிசில் பரீட்சையின் சித்தியெய்திய விகிதம் தொடர்ச்சியாக குறைவடைந்ததென அவதானிக்கப்பட்டது. ஆகையால், 2013 இல் 10.12 சதவீத சித்தியெய்திய விகிதம் 2015 இல் 09.55 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது.

(எ) தென், மத்திய மற்றும் மேல் மாகாணங்களிலுள்ள தேசிய பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட விரிவான கணக்காய்வுகளின் போது கொள்வனவு வழிகாட்டல்களை மீறுதல், ஆதார ஆவணங்களின்றி கொடுப்பனவு செய்தல், உரிய அதிகாரம் மற்றும் முறையாக தயாரிக்கப்பட்ட கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களின்றி கொடுப்பனவு செய்தல் போன்ற நிதிக்கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. மேலும், ஆசிரியர்களின் விடுமுறை, தர உள்ளீடுகள் மற்றும் மாணவர்களின் புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் செயற்திட்டத்தின் கீழ் அரச மானியங்களின் வழங்கல்கள் என்பவற்றுக்கான முறையான பதிவேடுகளைப் பேணுகின்ற பகுதிகளிலுள்ள தேசிய பாடசாலைகளின் பொது நிர்வாக நடவடிக்கைகள் அத்தகைய பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட விரிவான கணக்காய்வுகளின் போது செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஏ) கல்வி அமைச்சின் 2007 திசெம்பர் 13 இன் 20/2007 ஆம் இலக்க சுற்றறிக்கையூடாக பாடசாலை ஆசிரியர்களுக்கான இடமாற்றக் கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் தேசிய பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்களின் வருடாந்த இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், 10/2377/436/052 இன் அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், பாடசாலை ஆசிரியர்கள் 08 ஆண்டுகளுக்கு ஒரு முறை இடமாற்றம் செய்யப்பட வேண்டுமென வேண்டப்பட்டிருந்தது. பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இடமாற்றம் செய்யப்படுவதற்கு உரித்துடைய 350 தேசிய பாடசாலைகளிலுள்ள பாடசாலை ஆசிரியர்களின் 75 சதவீதம் 08 ஆண்டுகளுக்கு மேலாக ஒரே பாடசாலையில் இருந்தனர்.

**3.3 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்**

---

கல்வி அமைச்சின் செயலாளர் கொள்வனவு நடைமுறையை பிரயோகிக்காது தெரிவு செய்யப்பட்ட தனியாா கம்பனியொன்றிற்கு சொந்தமான இடமொன்றில் வரிசை அமைச்சின் 185 மூப்பு உத்தியோகத்தர்களுக்காக பயிற்சி செயலமர்வொன்றினை ஒழுங்கு செய்வதற்கு தீர்மானித்திருந்ததுடன் அதன் மீது ரூபா 2.05 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் பயிற்சி செயலமர்விற்காக 150 உத்தியோகத்தர்கள் மாத்திரமே பங்குபற்றியிருந்தனர். பயிற்சி செயலமர்வினை நடாத்துகின்ற நோக்கம் கணக்காய்விற்காக விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், பயிற்சி செயலமர்வுகளின் வெளியீட்டினை மதிப்பிடுவதற்கு முறையான பொறிமுறையொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்ல.